29 மே, 2025

செயலாளர்,
நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சு,
கொழும்பு 10

<u>**பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ரத்து செய்! புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்கள் வேண்டாம்!**</u>

**1979 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க பயங்கரவாதத் தடைச் சட்டம் (PTA) ரத்து செய்தல்** மற்றும் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டங்கள் தொடர்பாக பொதுமக்களிடம் இருந்து கருத்துகள், பரிந்துரைகளை சமர்ப்பிக்க மிகவும் குறுகிய இரண்டு வார கால அவகாசத்தை வழங்கிய 2025 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆம் திகதி லங்காதீப செய்தித்தாளில் வெளியிடப்பட்ட செய்தித்தாள் அறிவிப்புக்கு இலங்கையின் கரிசனை கொண்ட மக்களாகிய நாங்கள் பதிலளிக்கிறோம்.

**ஆரம்பத்தில், ஒரு புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை உருவாக்குவதற்கான அரசாங்கத்தின் முடிவு தொடர்பின் நாங்கள் மிகவும் ஏமாற்றமடைவதோடு, கவலைப்படுகிறோம். பயங்கரவாத தடைச் சட்டம் ரத்து செய்யப்படும் என்று நாடாளுமன்றத்திற்கு பெரும்பான்மையான வாக்குகளுடன் செல்வதற்கு முன்னர், தேசிய மக்கள் சக்தி (NPP) மூலம் இலங்கை பொதுமக்களுக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டது. பயங்கரவாத தடைச் சட்டம் போன்ற அசாதாரணமானதும் அடக்குமுறையானதுமான சட்டங்கள் இந்த அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படாது என்ற வெளிப்படையான பொறுப்பேற்பு இருந்தது.** பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் அவசியமான தன்மை குறித்த பல்வேறு பகிரங்க அறிக்கைகள் மற்றும் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை பரிசீலிக்க ஒரு குழுவை நியமிப்பது போன்றவை மக்களுக்கு அளித்த வாக்குறுதியை மீறும் செயல்களாகும். கடுமையான பயங்கரவாத தடைச் சட்டத்தை ரத்து செய்வது என NPP ஆல் வழங்கப்பட்ட வாக்குறுதி, அக் கட்சி தற்போது ஆட்சியில் இருப்பதால் தடுக்கப்படுகிறது.

**இத்தகைய சட்டங்கள் இலங்கை பெரும்பான்மை நிர்வாக இயந்திரத்தால் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றன, இனவாதத்தால் கருவியாக்கப்படுகின்றன என்ற அறியாமையை நியமிக்கப்பட்ட செயற்குழுவின் அமைப்பு வெளிக்காட்டுகிறது என்பதை மேலும் கூறுகிறோம். இந்த செயற்குழு முக்கிய நலன்களை பிரதிநிதித்துவப் படுத்தவில்லை. அதாவது இதில் பெரும்பாலும் அரச அதிகாரிகள், இராணுவம் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் பணியாளர்கள் உள்ளனர், பாதிக்கப்பட்டவர்கள்/பாதிக்கப்பட்ட குடும்பங்கள், தமிழ் அல்லது முஸ்லிம் சமூக பிரதிநிதித்துவம் இல்லை. எனவே, மக்களின் சிறந்த நலன்களுக்காக, குறிப்பாக நமது சமூகத்தில் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களைக் கருத்தில் கொள்ளும் ஒரு அமைப்பாக, இந்த செயற்குழு மக்களின் பார்வையில் எந்த நியாயத்தன்மையும் கொண்டிருக்கவில்லை.**

கொடூரமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தினால் மனித வாழ்வின் மீதான பரந்த அளவிலான அழிவையும், முக்கியமாக தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்கள், 88/89 கிளர்ச்சியின் போது தெற்கைச் சேர்ந்த இளைஞர்கள், அண்மையில் நடந்த மக்கள் போராட்டத்தின் போது மாணவர் தலைவர்கள், மற்றும் இலங்கையில் மாற்று / அரச அதிருப்தி அரசியல் செயற்பாட்டாளர்கள் ஆகியோர் மீதான கொடூரங்களை தீவிரமாக பரிசீலிக்குமாறு நீதி அமைச்சரை நாங்கள் கோருகிறோம். **பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்துவதன் மூலம் வளர்க்கப்படும் அரசியல் சகிப்புத்தன்மையின்மையும், இந்த அடக்குமுறைச் சட்டத்தைப் பேணுவதன் மூலம் நமது அரசியல் கலாச்சாரத்திற்கு ஏற்படும் தீங்கும் சரிசெய்யப்பட முடியாதவை. சுதந்திரத்திற்குப் பின்னர் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் ஈடுபட்ட அரச ஒடுக்குமுறை, அரச வன்முறை மற்றும் பிளவுபடுத்தும் அடையாள அரசியலின் வரலாற்றிலிருந்து பிரிந்து செல்ல வேண்டிய நேரம் இது. இந்தச் சட்டம் எப்போதும் அரசின் அதிகாரவாத நலன்களைப் பாதுகாக்க மட்டுமே பயன்படுத்தப்பட்டது – மக்களின் நலனுக்காக அல்ல என்பதையே எமது அனுபவம் காட்டுகிறது. மக்களின் இறையாண்மையைப் பிரதிபலிக்கவும், சேதத்தை சரிசெய்யவும், மனித உரிமைகள் மற்றும் சுதந்திரம் மற்றும் கௌரவத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட மக்களுக்கு உண்மையான பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்ட ஒரு புதிய அரசியல் கலாச்சாரத்தை உருவாக்குவதற்குமான நேரம் இது.**

**பயங்கரவாதத் தடைச் சட்டம் (PTA) 1979 ஒரு ஆபத்தான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்.** இது இயல்பிலேயே அசாதாரணமானது என்பதுடன் (முதற் கட்டத்தில் நீதித்துறை மேற்பார்வை இல்லை அல்லது பாராளுமன்ற மேற்பார்வை இல்லை) சாதாரண குற்றவியல் சட்டத்துடன் அநியாயமான முறையில் நிரந்தரமாக செயல்படுகிறது. பொலிஸாருக்கு வழங்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்களை (பெரும்பாலும் சித்திரவதை மூலம் பெறப்படுகிறது) ஒப்புதல் வாக்குமூலங்கள், நிர்வாக தடுப்புக்காவல்களும் வெளியீடுகளைத் தடைசெய்ய ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்களும் ஜனநாயக சட்ட ஆட்சி மற்றும் மனித உரிமைகளுக்கு எதிரானவை. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் உள்ள அதிகப்படியான அதிகாரங்கள் 40 ஆண்டுகளுக்கும் மேலாக துர்ப்பிரயோகம் செய்யப்பட்டு வருவதோடு பாதிக்கப்பட்டவர்களும் அவர்களது குடும்பத்தினரும் இந்த சட்டத்தின் கைகளில் தொடர்ந்து பேரழிவு தரும் தனிப்பட்ட விளைவுகளை அனுபவித்து வருகின்றனர். பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு பரவலாக அங்கீகரிக்கப்பட்டதும் நீண்டகாலமாக இருப்பதுமான உள்ளூர் மற்றும் சர்வதேச கண்டனம் உள்ளது. 2015 ஆம் ஆண்டு ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் 30/1 உள்ளடங்கலான பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்த சட்டத்தை இரத்து செய்வதற்கு இலங்கை அரசாங்கம் பலமுறை உறுதியளித்துள்ளது. இலங்கை மனித உரிமை ஆணைக்குழு (HRCSL) 2022ல் "பயங்கரவாதத் தடைச் சட்டத்தை (PTA) முழுமையாக ரத்து செய்ய வேண்டும்" எனவும், "பயங்கரவாதம் நாட்டின் பொது சட்டத்தின் கீழ் விசாரிக்கப்பட வேண்டும்" எனவும் தெளிவாகப் பரிந்துரைத்துள்ளது.[1]

**மறுபுறம், பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்கான சட்டங்களும் நிறுவனங்களும் இலங்கையில் உள்ளன.** பயங்கரவாத குற்றங்களுக்கு தீர்வு காணும் இலங்கையின் குற்றவியல் சட்ட திட்டம்: இலங்கையின் தண்டனைக் கோவையின் கீழ் 15 சட்டச் சரத்துகள் குற்றங்களை வரையறுப்பதோடு[2], பயங்கரவாத எதிர்ப்பு தொடர்பான சட்டச் சரத்துகளில் ஐ. நா. உடன்படிக்கைகள் உள்வாங்கப்பட்டுள்ளன [3]. நாட்டில் தேசிய புலனாய்வு சேவை, பயங்கரவாத தடுப்பு புலனாய்வுப் பிரிவு (CTID) மற்றும் இலங்கை மத்திய வங்கியின் நிதி புலனாய்வு பிரிவு (FIU) ஆகியவை உள்ளன. இந்த பொது சட்ட அமைப்பு, **முழு நீதித்துறை**

---

[1] HRCSL - The Briefing of the Diplomats on O8th, Ogth, & 10th of February 2022 on the Road Map of the HRCSL for 2022 held at the Human Rights Commission Headquarters. https://www.hrcsl.lk/wp-content/uploads/2022/02/HRCSL-Press-Release-on-15.02.2022.pdf

[2] Penal Code offences - S.114 Waging or attempting to wage war, or abetting the waging of war against the State, S.116 Collecting men, arms and ammunition the intention of waging war against the State, S. 117 Deliberately concealing design to wage war, S.118 - Insulting words attempting to bring State into contempt, S. 119 - attempts to refrain President or MP from use of lawful power or assaults, restrains, uses criminal force against President or an MP, S. 120 - Causing disaffection towards the State or excites hatred or contempt towards the administration of justice

[3] Offensive Weapons Act No. 18 of 1966, Offences against Aircraft Act No. 24 of 1982, Suppression of Unlawful Acts of Violence At Airports Serving International Civil Aviation No. 31 Of 1996, Suppression of Unlawful Acts Against the Safety of Maritime Navigation No. 42 of 2000, Prevention of Hostage Taking No. 41 Of 2000 , Prevention And Punishment Of Crimes Against Internationally Protected Persons No. 15 of 1991, Suppression of Terrorist Bombings Act, No. 11 Of 1999, Chemical Weapons Convention No.58 Of 2007, Convention on The Suppression of Terrorist Financing Act No. 25 of 2005, Financial Transactions Reporting Act No. 6 of 2006, Prevention of Money Laundering Act No. 05 of 2006 (as amended), SAARC Regional Convention on Suppression Of Terrorism Act No. 70 Of 1988, United Nations Act No 45 of 1968 and regulations made under that to deal with terrorist financing and money laundering and which has led to listing of persons and organizations, Computer Crimes Act, S.6 on Offences committed against National Security.

**மேற்பார்வைக்கு** உட்பட்டு, 'பயங்கரவாத அச்சுறுத்தலுக்கான' இலங்கை அரசின் எதிர்வினையை உருவாக்க வேண்டும்.

இந்த பின்னணியில் தான் பின்வருவனவற்றை நாங்கள் உறுதியாகப் பரிந்துரைக்கிறோம்

1. **1979 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை (PTA) உடனடியாக இரத்து செய்வதோடு,** மற்றொரு சட்டத்தை உருவாக்குவதற்காக பணிபுரியும் செயற்குழு மூலம் அச்செயற்பாட்டை தாமதப்படுத்தும் தந்திரோபாயங்களை முயற்சிக்க வேண்டாம். **பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ரத்து செய்யும் வரை, அதனை நடைமுறைப்படுத்துவதற்கு எதிராக அரசாங்கம் தடைவிதிக்க வேண்டும்.**
2. **இலங்கையின் தற்போதைய குற்றவியல் நீதிப் பொறிமுறையில் "பயங்கரவாதம்" தொடர்பான வழக்குகளை விசாரிக்க குறைந்தது 15 சட்டங்கள் உள்ளன. இதில் தண்டனைச் சட்டம் (Penal Code), குற்றவியல் நடைமுறைச் சட்டம், மற்றும் பிற சிறப்புச் சட்டங்களின் விதிகள் அடங்கும். எனவே, பயங்கரவாதத்திற்கென தனிச் சட்டம் ஒன்றின் தேவை இல்லை.**
3. நடமாடுதல், கூட்டங்களை நடத்துதல், ஒன்று கூடுதல், பேரணி அல்லது ஊர்வலம் அல்லது எந்தவொரு போராட்டத்தின் மூலமும் கோரிக்கைகளை முன்வைத்தல் ஆகியவற்றிற்கான சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் வகையில் **பொலிஸ் / நிறைவேற்று அதிகாரம் ஆகியவற்றிற்கு அதிகாரங்களை வழங்கும் எந்தவித சட்டங்களும் இயற்றப்படாது என்பதை உறுதிப்படுத்த வேண்டும்**. விவாதங்களும் கருத்து வேறுபாடுகளும் ஒரு ஜனநாயகத்தின் இன்றியமையாத அம்சங்கள். ஆனால் அண்மைய ஆண்டுகளில், ஏராளமான அடக்குமுறை சட்டங்கள் இந்த அடிப்படை உரிமைகளை அரித்துவிட்டன. தனிநபர்களும் மக்களும் ஜனநாயக வழிமுறைகளின் மூலம் நியாயமான அபிலாசைகளைப் பின்தொடர்வது பயங்கரவாதம் தொடர்பான சட்டங்களின் மூலம் எந்த வகையிலும் மீறப்படக்கூடாது.
4. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவருக்கும் நீதியை விரைவுபடுத்தும் நடவடிக்கைகளை அரசியல் மற்றும் சட்ட தலையீடுகள் மூலம் எடுக்க வேண்டும். இதில் ஜனாதிபதி மன்னிப்பு வழங்குதல், ஆதாரங்கள் இல்லாத பட்சத்தில் குற்றச்சாட்டுகளை மீளப் பெறுதல், அல்லது ஒப்புதல் வாக்குமூலங்கள் மட்டுமே முதன்மை ஆதாரமாக இருக்கும் வழக்குகளில் குற்றச்சாட்டுகளை விலக்குதல், மற்றும் இன்னும் குற்றம் சாட்டப்படாதவர்களை விடுதலை செய்தல் ஆகியவை அடங்கும்.
5. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு குற்றவாளிகளாக தீர்ப்பளிக்கப்படாதவர்களுக்கு அரசினால் இழப்பீடு வழங்கப்பட வேண்டும். இதில் ஒப்புக்கொள்ளுதல், மன்னிப்பு கேட்டல், நஷ்டஈடு, உடல் மற்றும் மன நலச் சிகிச்சை மற்றும் வாழ்வாதார ஆதரவு ஆகியவை அடங்கும். பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது இறந்தவர்களின் குடும்பங்களுக்கும் இழப்பீடு வழங்கப்பட வேண்டும்.